O.S.69-2018

# முதன்மை மாவட்ட நீதிமன்றம், புதுக்கோட்டை

அ.வ.எண்.69/2018

பிரதிவாதி தரப்பு 1வது சாட்சி சோமையா என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திருமதி. ஜெயஸ்ரீ, நகல் பிரிவு கண்காணிப்பாளர்/கிரேடு-1 பெஞ்ச் க்ளார்க்(பொறுப்பு) என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. சோமையா | வயது | : | 59/23 |
| தகப்பனார் பெயர் | : | சுந்தரம் | தாலுகா | : | திருமயம் |
| கிராமம் | : | கோட்டூர் | தொழில் | : | விவசாயம் |

நாள்-30.10.2023

பி.வா.சா.1

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1) எனக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்த செல்வகுமார், சுகன்யா ஆகியோர்களுக்கு எதிராக அவர்கள் என்னுடைய காசோலையை தவறாக பயன்படுத்தியுள்ளார்கள் என்று நான் புகார் கொடுக்கவில்லை என்றால் கொடுத்துள்ளேன்.

2) அந்த புகார் மனு சம்மந்தமாக நான் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றாலும், எதிர் வழக்குரை, கூடுதல் வழக்குரை மற்றும் முதல் விசாரணை பிரமாண வாக்குமூலம் ஆகியவற்றில் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் உண்மையிலேயே கொடுக்கவில்லை என்றாலும், அவ்வாறு கொடுத்திருந்தால் இந்த விபரங்களை சொல்லியிருப்பேன் என்றாலும் சரியல்ல.

3) நான் செல்வகுமார் மற்றும் சுகன்யா ஆகியோர்களிடம் வாங்கிய பணத்தை கொடுத்துவிட்டேன் என்பதால் அவர்கள் மேல் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல.

4) நான் வாதியிடம் ரூ.14 லட்சம் பணம் பெற்றுக்கொண்டு, அதற்கு மாதம் ரூ.100க்கு ரூ.1 வீதம் வட்டி செலுத்துவதாக ஒப்புக்கொண்டு பிராமிசரி நோட்டு எழுதிகொடுத்துள்ளேன் என்றாலும், தற்சமயம் வாதியை ஏமாற்றுவதற்காக உண்மைக்கு மாறாக கட்சி செய்கிறேன் என்றாலும் சரியல்ல.

5) பி.வா.சா.ஆ.2 சம்மந்தமாக எதிர்வழக்குரை, பதில் அறிவிப்பு, பதில் வழக்குரை ஆகியவற்றில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.2 மோசடியாக தயார் செய்ததால்தான் அது குறித்து சொல்லவில்லை என்றால் சரியல்ல.

மு.மா.நீ,

6) வாதியிடம் புரோநோட்,காசோலை போன்றவற்றை எந்த தேதியில் எங்கு வைத்து கொடுத்தேன் என்பதை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

7) பி.வா.சா.ஆ.4 புகார் ஆவணம் எனது அதிகாரத்தை பயன்படுத்தி, வாதியை மோசடி செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் தொடர்ந்து பொய்யான புகாராக கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

8) பி.வா.சா.ஆ.1 மற்றும் 5 ஆவணங்களில் உள்ள கையெழுத்து வாதிக்குரிய கையெழுத்து என்பதை நிரூபிக்க நான் தயாராக உள்ளேன்.

9) பி.வா.சா.ஆ.1 மற்றும் 5 ஆவணங்களில் உள்ள கையெழுத்து வாதிக்குரிய கையெழுத்து அல்ல என்றால் சரியல்ல.

மறு விசாரணை - இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
புதுக்கோட்டை.